[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு வழிவகுக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார கார்ப்பரேஷனை அரசு ஏற்றுள்ளது. அரசு ஏற்றுக்கொண்ட பின்னாலும் மற்ற மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. அவர்களுக்கும் சலுகைகளை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதுபற்றி அரசு ஆராயும்.

[முற்பகல் 9–10]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தனியாரிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு நாட்டுடைமையாக்கப்பட்ட மின் வாரியங்கள், முன்பு அவை லாபத்தில் நடைபெற்றதைப் போல இப்போதும் லாபத்திலே நடைபெறுகிறதா அல்லது நஷ்டத்திலே நடைபெற்று வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதற்கான விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இதைப்போன்ற தனியார் மின் நிறுவனங்கள் எவ்வளவு இயங்கி வருகின்றன? அவற்றையும் வாரியம் எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது உத்தேசம் அரசினிடத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனியார் மின் நிறுவனங்கள் முழுவதும் வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன. ஒருசில நகராட்சி மன்றங்கள் மட்டும்தான் மின் நிறுவனங்களை தங்களது நிர்வாகத்தின் கீழ் இயக்கி வருகின்றன.

பொறியியல் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு

*வினா எண். 339 திரு. க. சுப்பு : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றவர்களுக்கு மற்ற துறைகளில் வழங்கப்பட்டிருப்பதுபோல் சிறப்பு ஊதிய உயர்வுகள் (Advance increments) மின்வாரியத்தில்

1979 மார்ச் 12]

பணியாற்றுவோருக்கு மட்டும் இன்னும் வழங்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (ஆ) மின்சார வாரியத்தின் செலவில் இல்லாமல் தங்கள் சொந்தச் செலவில் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றுள்ள பொறியாளர்களுக்கு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

மேலத்தொட்டியப்பட்டியில் நியாயவிலைக் கடை.

*வினா எண். 340—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி பிள்ளையார் நத்தம் பஞ்சாயத்து, மேலத்தொட்டியப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை நிறுவவேண்டும் என பொதுமக்களிடம் இருந்து அண்மையில் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :

(அ) இது சம்பந்தப்பட்ட கோரிக்கை அரசுக்கு எதுவும் வரப்பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நான் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது பிள்ளையார் நத்தம் பஞ்சாயத்து, மேலத்தொட்டியப்பட்டி கிராமத்தில் உள்ள மக்கள் என்னிடத்தில் கோரிக்கை மனு கொடுத்தார்கள். அந்த மனுவை நான் மாவட்ட கலெக்டர் அவர்களுக்கும், திருவில்லிப்புத்தூர் சரக டி.ஆர். அவர்களுக்கும் அனுப்பினேன். ஆனால் அது இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இனிமேல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்போது ரெஜிஸ்டர் செய்து அனுப்பினால்தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே இப்போது நான் கூறுவதையே ஒரு கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு மீண்டும் அதனைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.